Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.


| | | |
|---|---|---|
| வெண்டாமரை க. | 1913-ம் ஆூ டிசம்பர் மீ | இதழ் கஉ. |





பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.



| | |
|---|---|
| வருஷ சந்தா ரூ 1 | வெளிநாட்டுக்கு ரூ 2 |
| தபாற்கூலி அணா 4 | தனி சஞ்சிகை அணா 2 |

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

## உள்ளுறை.


பக்கம்

பிரசங்கம்: — பத்திராதிபர். ... ... ... ... 1

பாலசிக்ஷை:-ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 5

ரமணி (ஓர் காதற் கதை): — ஸ்ரீமத் சு. அ. சுப்பராயப்பிள்ளை, புதுவை. ... ... ... ... 8

கள்ளைவிற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதிலும், கஸ்தூரிவிற்றுக் கால்பணம் சம்பாதிப்பதுமேல்:-இதோபதேசி. 12

மணிமேகலை: — பத்திராதிபர். ... ... ... 14

தொல்காப்பியம்: — இலக்கணக்குட்டி. ... ... ... 19

மங்கலம்:—வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர-சுப்பைய சுவாமிகள். ... ... ... ... 20

நியாயமாலா:—ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சிபுரம். ... ... ... ... ... ... 21

கப்பற்காரன் பேச்சு, காற்றடித்தால் போச்சு: — இதோபதேசி. ... ... ... ... ... ... 22

வைத்தியக் குறிப்பு: — ஸ்ரீமத் V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், Ex. முனிசிப்பல் கௌன்சிலர் பழநிஸ்தலம். ... ... ... ... ... 24

சமாசாரம்: — (வெள்ளத்தால் நேர்ந்த விபத்து) ஸ்ரீமத் சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி, பரங்கிப்பேட்டை.... 25



## பரிசுத்தமான தேன்.

காடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால் நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில் விற்கும் வெல்லப்பாகைக்கலந்த தண்ணீர்போன்ற தேனல்ல. இத்தேன் மிகவும் தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவு மிருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்திய சாஸ்திர முறைப்படிக்கு எங்களால் சுத்தியும் செய்யப்பட்டு விற்கப்படுகிறது. கடைகளில் விற்கும் தேன் ஒரு சேர் சேர்க்குமிடத்தில் நம்மால் விற்கப்படும் தேன் 4 துளிகள் உபயோகித்தால் போதுமானது. இப்படிப்பட்ட மேலானதும், சுத்தமானதும், சுயமானதுமாகிய சரக்குக் கிடைப்பதரிது. மருந்துகளை இத் தேனுடன் அநுபானித்து உட்கொண்டால் மருந்துகளின் வீரியமும் குணமும் அதிகரிக்கச் செய்யும்.

விலை டின் 1-க்கு அணா 12. ஒன்று அல்லது இரண்டு டின்கள் வரையில் அனுப்ப வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய்,

ஆயுர்வேத அவுஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள்கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

273



௨
ஸ்ரீவாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ஆ டிசம்பர் மீ [இதழ் கஉ.

## இலௌகிகப் பகுதி.

### பிரசங்கம்.

பலர் குழுமியுள்ள சபையின்கண், கற்றவரு மற்றவருங் களிப்படையுமாறு, எடுத்துக்கொண்ட விஷயத்தை, சுருதி யுக்தி அநுபவ வாயிலாக விளக்கி இனிது முடித்துக்காட்டுதலே பிரசங்க மெனப்படும்.

பிரசங்கஞ் செய்தலின் அருமை மிகப் பெரிது. ஏனெனில், அறியாமை மிக்க வுலகத்தில் கல்விகற்றலே அருமை. கற்று இலக்கணம் பிழையாது கவிபாடுதல் அதனினும் அருமை. கற்ற பொருளைப் பிறர்க்கு விளங்க எடுத்துக்கூறும் சொல்வன்மையோ சாலவருமை. ஆகவே கற்றவருங் கல்லாதவருங் கூடியுள்ள ஓர் பெரிய சபையை மகிழச் செய்யும் பிரசங்கமானது அருமையினும் அருமையாமென்பதை யாம் அறைதல் வேண்டுமோ!

“ கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் — சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண் ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு. ”

274



என்ற குமாகுருபானர் திருவாக்கே அதனைத் தெற்றெனவிளக்கும். இம்முதுமொழியின் பொருளில் யாம் சற்றுப் புகுவோம்.

ஒருவனுக்கு அவன் கற்ற கல்வியே மனைவியாகவும், கவி பாடும் வன்மையே அம்மனைவிக்குப் புதல்வனாகவும், கேட்போர்க்குப் பொருள் விளங்கச் சொல்லும் சொல்லின் வளப்பமே செல்வமாகவும் இருத்தலுமன்றி, கல்வி கேள்விகளால் மாட்சிமைப்பட்ட சபையை அலங்கரிக்கும் பிரசங்க வன்மையாகிய செல்வமும் சிலர்க்கு உண்டு என்பது இதன்பொருள். ஊன்றி நோக்குமிடத்து, ஒருவன் வாழ்க்கைக்குப் பெண்டும் பிள்ளையும் பொருளும் எப்படி ஆவசிகமோ, இவற்றுள் ஒன்று குறையினும் எப்படிச் சிறப்புக் குன்றுமோ அப்படியே ஒருவனுக்குக் கல்வியும் கவிபாடுந் திறனும் கற்றதைப் பிறர்க்கு விளங்கக்கூறுஞ் சொல்வன்மையும் ஆவசிகமென்பது பெறப்படும். அன்றியும், பெண்டும் பிள்ளையும் பொருளுமுடைய ஒருவனுக்குப் பொருள் அளவு கடந்திருக்குமாயின் பெருஞ் சிறப்புறுவதுபோல, கல்வியும் கவிபாடுதலுஞ் சொல்வன்மையும் உடைய ஒருவனுக்குப் பிரசங்க சக்தியும் உண்டாயிருப்பின், அச் சிறப்பின் பெருமையைச் செப்புவதெங்ஙன்? அச்செல்வம் மிக அரிதாதல் பற்றியே, “மாணவை மண்ணுறுத்துஞ் செல்வமும்” என உயர்வு சிறப்பும்மை கொடுத்ததுமன்றி, பலர்க்கும் அது உண்டாவ தருமையென்பது தோன்ற “உண்டு சிலர்க்கு” என்றுங் கூறினரென்க.

இத்துணைப் பெருஞ்சிறப்பினதாய பிரசங்க வன்மையைப் பெற்றவர்கள் ஐயந்திரிபறக் கற்றவர்களா யிருத்தல்வேண்டும். ஏனெனின், அவர்களே கலைக்கடலுண் மூழ்கி இலக்கிய விலக்கணமென்னுங் கண்ணாடி கொண்டு பரிசோதித்து உண்மைப்பொருளாகிய உயர்ந்த இரத்தினங்களைக் குற்றமறத் தேடியெடுத்துக் கொடுக்க வல்லவர்கள். அவர்கள் வாய்மொழியே உலகம் உய்தற் கேதுவானது.

நன்கு கல்லாதவர் சிலர்க்கும் சபையில் நின்று பேசும் சக்தி அமைந்திருப்பதுண்டு. அப்படிப்பட்டவர்கள் நல்லாசிரி

யரை யடுத்து ஐயந்திரிபறக் கற்று அச் சக்தியை உபயோகப்படுத்துவார்களானால் அது உலகத்திற்கு எவ்வளவோ பிரயோசனகரமா யிருக்கும். அங்ஙனமின்றிச் சிலர் முறைப்படி கல்லாது ஏதோ சிறிது கற்றமாத்திரத்தானே எல்லாந் தெரிந்துவிட்டதாக நினைத்துச் செருக்குற்றுத் தான்றோன்றித் தம்பிரான்களாய்ச் சபையில் நின்று மனம்போனபடி பேசி, தாங்கள் அரிதிற் பெற்ற சக்தியைப் பாழ்படச் செய்கின்றார்கள்.

அவர்கள் பிரசங்கம் கடிவாள மற்ற குதிரைபோன்று ஒரு வழிப்பட்டதன்று. எடுப்பதொன்று முடிப்பதொன்றா யிருக்கும். கூறியது கூறல், மாறுகொளக்கூறல், வழூஉச்சொற்புணர்த்தல், மற்றொன்று விரித்தல் முதலிய குற்றங்கட் கிடனாய் நிற்கும். “அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்” என்ற செந்நாப்போதார் திருவாக்கின்படி, நிரம்பக் கல்லாதவர்கள் பிரசங்கம் பயன்றரக்கூடியதன்று.

அன்றியும் அவர்கள் வாய்மொழி, கேட்பவர்களுக்குச் சில சமயம் விபத்தையும் விளைக்கக்கூடியது. எங்ஙனமெனின், கலைகளோ பெருங்காடு. அதில் விஷயங்கள் பற்பல விரவிக்கிடக்கும். “எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்ப தறிவு” ஆதலினாலே, ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்த அறிவில்லாதவர்கட்கு மெய்ப்பொருள் இதுவென எடுத்துக்காட்டும் வன்மையிராது. அதனால் பொய்ப்பொருள் மெய்ப்பொருளாகவும், மெய்ப்பொருள் பொய்ப்பொருளாகவும் கொள்ளக் கிடக்கும். அறியாமையால் பொய்ப்பொருளை மெய்ப்பொருளென்று கூறின், நுண்ணறிவில்லாத சிலர் அதனை உண்மையென்று நம்பி ஒழுகத் தலைப்பட்டு நன்மைக்குப் பிரதியாகத் தீமையடைய நேருமன்றோ. அம்மட்டோ! அவர்கள் அதனை மற்றவர்கட்குச் சொல்ல, மற்றவர் வேறு சிலர்க்குச் சொல்ல, இப்படியே அநர்த்த பரம்பரைக்கு ஏதுவாய்விடும். இங்ஙனம் அறிவுடையார்க்கு வெறுப்பையும் அறிவிலார்க்குத் தீமையையும் விளைப்பதைவிட, அவர்கள் வாய்திறவாம லிருப்பார்களாயின் அதுவே உலகத்திற்குச் செய்யும் பேருதவியா யிருக்கும். நிற்க,

பிரசங்கஞ்செய்வாரில், தங்கள் கல்வித்திறத்தையும் வாக்கு வன்மையையும் காட்டுவதே நோக்கமாகக் கொண்டவர் சிலர். அடிக்கடி வேடிக்கையான கதைகளைச் சொல்லி, சனங்கட்கு நகைப்பு விளைத்தலையே நோக்கமாகக் கொண்டவர் சிலர். வெறும் வேடிக்கைக் கதைகளினலேயே சனங்களைத் திருப்திபடுத்தி அவர்களால் தாங்கள் நன்மைபெற நினைப்பவரை ஈண்டுக் கூறியதென்க. இப்படிப்பட்டவர்கள் பிரசங்க வாயிலாகப் பிறர்க்கு நன்மை புரிவதெப்படி ? இவர்கள் நோக்கமனைத்தும் எவ்விதத்தினும் சுயநலத்தையே கருதியதாதலின் இவர்கள் பிரசங்கமும் பொது ஜனங்கட்கு அவ்வளவு நன்மை பயக்கக்கூடியதன்று. பலிக்கும் பயன் விளைக்கக்கூடிய வாக்கு வல்லமையைத் தம் பொருட்டுமாத்திரம் உபயோகப்படுத்திக்கொள்வது விசனித்தற்குரியதே யன்றோ !

“ எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு — மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும். ”

என்ற ஆன்றோர் அமுதவாக்கின்படி, தருக்கம் வியாகரண முதலியன பயின்று கற்றற்குரியவைகளைச் சந்தேக விபரீதமறக் கற்று உண்மையுணர்ந்து வாக்கு வல்லமையும் பெற்று, தாம் பெற்ற பேறெல்லாம் தம்போல் மற்றவர்களும் பெறவேண்டுமென்னுங் கருணையினல் பிரசங்கஞ் செய்பவர்களே உத்தம பிரசங்கிகள். அவர்கள் தங்கள் கல்வித்திறமை முதலியவற்றைக் காட்டக் கருதாதவர்கள். சொல்லும் விஷயத்தில் முழுவிழிப்புடையவர்கள். தாம் கூறுவது பிறர்க்கு விளங்கவேண்டு மென்னும் அக்கறை பெரிதுமுடையவர்கள். பிறர் நன்மையையே கோரிய பெருங் கருணையாளர்கள்.

அப்படிப்பட்டவர்கள் பிரசங்கமே நல்ல பிரசங்கம். சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் முதலிய அழகு நிரம்பி நவரசங்களும் பெருக்கெடுக்கும் அப் பிரசங்கமே கேட்டற் குரியது. அதுவே நமது அஞ்ஞானத்தை யகற்றவல்லது. அரும் பெரும்

பேற்றையளித்தற்பாலது. ஆதலின் அத்தகைய பிரசங்கங்களையே நாம் யாவரும் கேட்டல்வேண்டும்.

பத்திராதிபர்.

---

## பால சிக்ஷை.

எ-வது அத்தியாயம்.

ந-வது வயது.

( தொடர்ச்சி. )

### சன்மார்க்கப் பயிற்சி.

இவ் வயதுக் குழந்தைகளைச் சன்மார்க்கத்திற் பயிற்றுவதற்குக் கற்பிக்கவேண்டிய நீதிகளில் தாய் தந்தையர்மேற் பற்றும் பணிவும், பரோபகாரமும், ஜீவகாருண்யமும், வாய்மை முதலியவைகளுமே முக்கியமானவை.

### பெற்றோர்மேற் பற்றும் பணிவும்.

“ அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம் ” என்பது சாமான்ய நீதியன்று. இதுவே பூர்வகாலந்தொட்டு நமது தேசத்தில் பாலசிக்ஷைக்கு மூலாதாரமாக அமைந்துள்ளது.

கடவுளின் தத்துவத்தையும் தர்மாதர்மத்தின் பலாபலத்தையும் அறிந்தொழுகும் சக்தியற்ற இளங்குழந்தைகட்கு, பெற்றோரையே கடவுளர்களாகக் கற்பித்துக்காட்டி அவர்களை வழிபடுதற்கு மிஞ்சிய அறநெறி யின்றென ஆன்றோர் ஏற்படுத்திவைத்தனர். “ தந்தை சொன் மிக்க மந்திரமில்லை ” “ தாய் சொற் றுறந்தால் வாசகமில்லை ” “ ஈன்றாளி னென்னக் கடவுளுமில் ” இத்தியாதி மூதுரைக ளெத்தனையோ இதற்குச் சான்றாக நிற்கின்றன.

நமது தேசத்தில் பூர்வகாலத்தில் குழந்தைகளும் தாய்தந்தையரைத் தெய்வமாகப் பேணி அவர்கள் வாய்மொழியை வேதமொழியாகக்கொண்டு நல்லொழுக்கத்திற் பயில்வர். எஞ்ஞான்றும் பிள்ளைகள் பெற்றோர் மாட்டு அத்தியந்த பற்றும் பணிவும் பாராட்டுவர். தந்தையரைக் காணின் பிள்ளைகள் எவ்வயதினராயினும் எழுந்து கைகட்டி வாய்பொத்தி நிற்பர். எதிர்மொழி பகரார். சம ஆசனத்திலிருக்கவும் இணங்கார். பெற்றோர் ஆஞ்ஞையைப் பயபக்தியுடன் ஏற்று இயற்றுவர். தற்போதோ, இத்தகைய மரியாதையும் பக்ஷமும் எத்தனையோ குன்றி நிற்கின்றன.

278



இக்காலத்தில் தாய்தந்தையரின் சொற்கடங்காப் பேய்மக்களும், பெண் சொற் கிணங்கிப் பெற்றோரைப் பேணாப் பேடிகளும், ஈன்றோர்க் கொன் றீயா துதறிவிடும் ஈனர்களும் ஆகிய இவர்களின் தொகையைக் கணிக்கவல்லவர் யாவர்? பெற்றோரை யடித்த கையை முறித்துவிட மநுநீதி விதித்தபடி முன்னாளில் அரச தண்டனையும் நடந்துவந்தது. அந்நீதி இந்நாளினும் அநுசாரணையிலிருப்பின் கைம்முறிபட்டவர்கள் கணக்கில ராவரன்றோ!

மாதா பிதாக்கள்மீது மக்கட்குரியதாய பற்றும் பணிவும் இவ்வாறு குலைந்து நிற்பதற்கு நாம் குழந்தைகளை வளர்க்கும் முறையில் முற்றும் தவறிழைத்து வருதலே முக்கிய காரணமாகும்.

முன்னோர் பெற்றோரைத் தெய்வமாகக் கொண்டனர். நாமோ குருட்டுப் புத்திர வாஞ்சையால் பிள்ளைகளைத் தெய்வமாகக்கொண்டு, கண்டிப்பாய் அவர்களை நன்னெறியில் பழக்குந் திடனற்று, தாய்தந்தையர்மீது அவர்களுக்குப் போதிய பற்றும் பணிவும் உண்டாகும் வண்ணம் அவர்களை வளர்க்கும் வகையறியாது திகைக்கின்றோம்.

நம் விளக்காயினும் தொட்டாற் சுடாதொழியுமோ? இவ்வுறுதியை மறந்து குழந்தைகட்குப் பெற்றோர்மீது பயமும் பக்தியும் இளம் பிராயத்தினின்றே போதித்துவாராத தாய்தந்தையர் பின்னர்ச் சாதுயரடைகின்றனர்.

பெற்றோர்க்குப் பிள்ளைகள்மாட்டுள்ள பற்று இயல்பானதே. புத்திர வாஞ்சை பறவைகள் மிருகங்களிடத்திலும் தத்தங் குழவிகள் தக்க வயது வரும்வரையில் இயல்பாகக் காணப்படுகின்றது. இதற்கு மாறாக, பிள்ளைகட்குப் பெற்றோர்மாட்டுள்ள பற்று அத்துணை யியல்பானதன்று. அது செயற்கைப்பற்றே. “பெற்றோர் மனம் பித்து பிள்ளை மனம் கல்லு” என்ற மூதுரையும் இதற்கு இலக்காகும். இக் கருத்தைத் தழுவியே பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் உள்ள பற்று அருவி நீரை யொக்குமென்றனர் நூல்வல்லோர்: அது கீழ்ப்பாயுந் தன்மையதேயன்றி மேலேறுந் திறத்ததன்று.

ஆகவே நல் வளர்க்கை நற்போதனையினாலேயே பிள்ளைகட்குப் பற்றும் பணிவும் பெற்றோர்மாட் டேற்பட்டு வளருமென்பது நன்கு விளங்குகின்றது.

சிற்றிளம்பிராயத்தினின்றே குழந்தைகள் தாய்தந்தையரை நேசித்துப் பூசிக்கப் பயிற்றுதல் அவசியமாகும். எவ்வாற்றானும் பெற்றோர் மீது அவர்கட் கிருக்கவேண்டிய அன்பும் மரியாதையும் குறைவுபடா

வண்ணம் கவனித்து வரவேண்டும். இதை யோராத சில பெற்றோருமற்றோரும் பிள்ளைகட்கு, தாய்தந்தையர் மாட்டுள்ள பயபக்தி குறைந்து போவதற்குத் தாங்களே காரணமாகின்றனர்.

இரண்டு மூன்று வயதுக் குழந்தையை நோக்கி, “அப்பாவை உதை, அம்மாளைத் திட்டு” என்று கற்பித்து அவர்கள் குதலைச் செய்கைக்கும் மதலைச் சொற்களுக்கும் உளமகிழ்கின்றனர். இதனால் அப்பாவும் அம்மாவும் உதைக்கப்படுதற்கும் திட்டப்படுதற்கும் உரிய பொருள்களென, சிறுகுழந்தை இளமனதில் ஒருணர்வு தோன்றுதற்கும் அவர்களிடத்துத் தனக்கிருக்கவேண்டிய பயபக்தி யற்றுப்போதற்கும் ஏதுவாகின்றது. தாய்தந்தையர்மீது உள்ள மரியாதையைச் சிதைக்கும் செயல்களனைத்தையும் குழந்தைகள் விளையாட்டாகவேனும் செய்யாது விலக்கி வரவேண்டும்.

பெற்றோர் விதித்ததே நன்மை அவர் விலக்கியதே தீமையென்பதையும், அவர்கள் சொன்மீறி நடக்கக் கொஞ்சமேனும் இடந்தாரென்பதையும் அநுபவ பூர்வகமாய் இரண்டு மூன்று வயதினின்றே உணரும்படி செய்துவரின், பிள்ளைகளிடத்திற் கீழ்ப்படிதலும் பணிவும் சுலபத்திலேற்படும். அழுகைக்கும் சண்டித்தனத்திற்கும் இளகி, அவர்கள் விரும்பியவாறு நடக்க இடந்தரலாகாது இவ்வாறு பயிற்றுவதினால் குழந்தைகள் மனம்போனபடியன்று நம் மிஷ்டப்படியே நடக்க இரண்டு மூன்று வயதினின்றே நன்கு பழகிவிடுகின்றார்கள்.

பெற்றாரோடு ஒருமனப்பட்டு ஒழுகிவரும் குழந்தைகளிடத்தில் அவர்கள்மீது நீங்கா அன்பு விளையுமென்பதற்கு ஐயமென்ன? வயது வளர வளர, பற்றும் பணிவும்கூட வளர்ந்து தங்கள் ஆயுள்வரையில் பெற்றோரைத் தெய்வமாகவே பேணுவர்.

இவ்வுறுதிகளை யெல்லாம் அலட்சியம் செய்து பிள்ளைகளை இளமையினின்று சரிவர வளர்க்காத பெற்றோர்க்கு, கடவுள் அப்பிள்ளைகளையே தண்டனையாக ஏற்படுத்துகிறார்.

துஷ்டப் பிள்ளைகளை யுடைத்தா யிருப்பதைவிட ஒருவற்கு இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கும் கேடு வேறுண்டோ?

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

280

# ரமணி.

## ஓர் காதற் கதை.

### அத்தியாயம் 3.

( தொடர்ச்சி. )

'சாவித்திரீ' என்ற ஓர் மெல்லிய குரல் உத்தரமாகத் தொனித்தது.

அப்பொழுது சாவித்திரி தன்னையே மறந்துவிட்டாளென்றால் அவள் தன் சஞ்சலத்தை மறந்தாளென்று சாற்றவும் வேண்டுமோ? திடீரென அவள் தேக முழுவதும் புளகிதமுற்றது. நீரில் மூழ்கி மூழ்கிப் பொலிவிழந்திருந்த நேத்திரங்களிரண்டும் புதியதோர் பொலிவெய்திப் பிரகாசித்தன. அவ்விழிகளின்மீது அதி சௌந்தரியமாய் வளைந்தமைந்திருந்த நீல புருவங்கள் சிலிர்த்தன. இரு கன்னங்களும் சிவந்தன. சஞ்சலத்தில் ஒன்றோடொன்று சேர்ந்திருந்த இதழ்கள் வியப்பினால் ஒன்றையொன்று பிரிந்து சற்று விலகிநின்றன. நெஞ்சமோ நிகரற்ற பரவசமெய்தி நெகிழ்ந்து பதைத்தது. என் சாவித்திரியினிடத்துத் திடீரென இத்தனை மாறுபாடுகள்? இவற்றிற்கெல்லாம் ஏக காரணம் 'சாவித்திரீ' என்ற குரல்தான். அது என்ன மகிமையுள்ள குரலம்மா! அதுதான் சாவித்திரியின் உள்ளத்தில் அழியா தமர்ந்திருக்கும் பரிசுத்த காதலுக்காதாரமாகிய புருஷனது குரல்.

பரவசத்தினால் க்ஷணநேரம் பாவையாக நின்ற பைங்கிளி சிறிதேனும் ஆலோசியாமல் சாளரத்தின் இரு கதவுகளையும் திறந்துவிட்டாள். ஜனார்த்தனன் அவள் முகத்தைப் பார்த்தான். அவளும் ஜனார்த்தனன் முகத்தைப் பார்த்தாள். இருவரும் என்ன நினைத்தார்களோ, உடனே ஒவ்வொருவரும் தம் மோவாய்க்கட்டையைத் தம் மார்பின்மீ தமர்த்தினர். இந்நிலைமையில் இருவரும் அரை நிமிஷநேரமிருந்தனர். பின்பு ஜனார்த்தனன் தான் வந்த கருத்தை விரைவில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்றெண்ணி, ஒருவாறு தன் நாணத்தை வசப்படுத்திக்கொண்டு, தலைநிமிர்த்தி "உன்னுடைய கடிதத்தைப் பார்த்தேன். ஆனால் இன்னும் சில விஷயங்கள் உன்னிடமிருந்து அறிந்துகொள்ளவேண்டும். அதற்காகத்தான் நான் இப்பொழுது வந்தேன்" என்றனன்,

சாவித்திரி தலைநிமிர்த்தவில்லை. உத்தர முரைக்கவுமில்லை. "உன் கடிதத்தைப் பார்த்தேன்" என்றதும் அவள் 'லஜ்ஜை' என்ற சமுத்திரத்தில் மூழ்கிவிட்டாள். "சீ! கோஷா ஸ்திரீயாகிய நான் ஒரு புருஷனுக்குக் கடிதம் எழுதலாமா! என்ன மடமை! என்ன துணிவு! அன்றியும் இராக்காலத்தில் நான் இந்தப் பலகணியின் கதவுகளைத் திறந்து ஓர் புருஷனது பார்வையில் நிற்பது தகுதியாகுமா! ஆகையால் இப்பொழுதே ஜன்னல் கதவுகளை அடைத்துவிட்டால்தானென்ன!" என்றவாறு அநேக எண்ணங்கள் பேதையின் சித்தத்திற் கலங்கின. ஆனால் அவள் எண்ணியவாறு சாளரத்தின் கதவுகளை அடைக்க அவள் கரங்கள் தைரியம் பெறவில்லை.

தான் பேசியதற்கு யாதொரு பதிலு மில்லாமற்போகவே ஜனார்த்தனன் மீண்டும் "சாவித்திரீ! நான் இராக்காலத்தில் இந்த ஜன்னலருகே வந்தது தவறென்று ஒருவேளை நீ எண்ணலாம். ஆனால் உன்னிடமிருந்து சில விஷயங்கள் தெரிந்துகொண்டால்தான் ரமணி காணாமற்போன மாயத்தைக் கண்டுபிடிப்பதற்குச் சரியான உபாய மறிந்துகொள்ளலாமென் றெண்ணித்தான் நான் உன்னைக் காணவந்தேன்" என்றனன்.

ரமணியைப்பற்றிப் பேசவே சாவித்திரியின் பழைய சஞ்சலங்கள் அவள் ஞாபகத்திற்கு வந்தன. வெட்கத்தினாலுந் துக்கத்தினாலும் உபாதிக்கப்பட்டுத் தெளிவாய்ச் சப்தியாத மெல்லிய குரலில் "என்னவேண்டுமானாலும் கேளுங்கள் சொல்லுகிறேன்" எனத் தலை தாழ்த்தியவாறே கூறினள்.

"நீயும் ரமணியும் சென்ற சனிக்கிழமை இரவு இந்த அறையில் பேசிக்கொண்டிருந்தீர்களே, அப்பொழுது உங்களைத் தவிர யார் யார் இந்த அறையிலிருந்தார்கள்?"

"அம்மாள் மாத்திரந்தான். ஆனால் அவள் நன்றாய்த் தூங்கின பின்புதான் நாங்கள் பேசினோம்."

"மற்றவர்களெல்லோரும் எங்கெங்கே படுத்திருந்தார்கள்?"

"புருஷர்களெல்லோரும் மாடியிலும் பெண்களெல்லோரும் வாசலுக்குக் கிழக்குப்பக்கத்திலிருக்கும் இரண்டறைகளிலும் படுத்திருந்தார்கள்."

"அந்த இரண்டறைகளிலும் யார் யார் படுத்திருந்தார்கள்?"

"நாச்சியாரத்தை, தங்கபத்திரைச் சின்னம்மாள், பவானியண்ணி, தங்கபத்திரைச் சின்னம்மாள் பெண் ரவி, விஜயரங்கதாசர்

282



பெண் சந்திரதுர்க்கம், அவருடைய தமக்கை யொருத்தி, (அவள் பெயர் எனக்குத் தெரியவில்லை ) ஆக ஆறுபேர் படுத்திருந்தார்கள். "

" மாடியிலே? "

" மாடியிலே படுத்திருந்தவர்கள், அப்பா, மதனகோபால மாமா, ரவியின் தகப்பனர், பவானி யண்ணியின் வீட்டுக்காரர், சந்திரதுர்க்கத்தின் அகமுடையான், விஜயரங்கதாசருடைய சகலர் லக்ஷ்மி நாராயணர், அவருடைய பெரிய கணக்கர் பட்டாபிராம், ஆக எழுபேர்கள். "

" முற்கட்டுத் தாழ்வாரத்திலாவது கூடத்திலாவது ஒருவரும் படுத்திருக்கவில்லையா? "

" தாழ்வாரத்திலா! — ஆமாம், அமிர்தம் படுத்திருந்தாள். "

" எந்தப்பக்கத்துத் தாழ்வாரத்தில்? நீ படுத்திருந்த அறைப்பக்கத்திலா, மற்ற ஸ்திரீகள் படுத்திருந்த அறைகளின் பக்கத்திலா? "

" எங்கள் அறைப்பக்கத்துத் தாழ்வாரத்தில்தான். "

" நீயும் ரமணியும் இந்த அறைக்குள் வருவதற்கு முன் யார் யார் விழித்திருந்தார்கள்? "

" எல்லோருந் தங்கள் படுக்கைக்குப் போய்விட்டார்கள். நானும் ரமணியுந்தான் கடைசியில் படுக்கை யறைக்குப் போனேம். "

" நீங்கள் இந்த அறைக்குள் வரும்பொழுது தாழ்வாரத்தில் படுத்திருந்த அமிர்தம் விழித்துக்கொண்டிருக்கவில்லையா? "

" இல்லை. அயர்ந்த நித்திரையி லிருந்தாள். "

" நீங்கள் படுக்கை யறைக்கு வரும்பொழுது மணி என்ன இருக்கும். "

" சுமார் பத்தரை இருக்கலாம். "

" நீங்கள் அறைக்குள் வந்தவுடனே பேச ஆரம்பித்தீர்களோ? "

" இல்லை, சுமார் அரைமணிநேரம் ரமணி என்னவோ வாசித்துக்கொண்டிருந்தாள். நான் கேட்டுக்கொண்டிருந்தேன். பிறகுதான் பேச ஆரம்பித்தோம். "

" மெல்லிய குரலில்தானே பேசிக்கொண்டிருந்தீர்கள்? "

" இல்லை யில்லை. எல்லோரும் தூங்கிக்கொண்டிருப்பார்களென்றெண்ணி எப்பொழுதும் பேசுகிற சாதாரண குரலில்தான் பேசினேம்."

“ அமிர்தம் விழித்திருந்தால் அவள் நீங்கள் பேசிய விஷயங்களைக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடுமல்லவா ? ”

“ கூடுந்தான். ஆனால் அவள் அந்த வேளையில் விழித்துக்கொண்டிருக்கவேமாட்டாள். ஒருகால் விழித்துக் கேட்டுக்கொண்டிருந்தபோதிலும் என்னுடைய ரகஸ்யங்களை அவள் ஒருவருக்கும் வெளியிடமாட்டாள். அவள் மிகவும் நல்ல பெண். ”

ஜனார்த்தனன் சற்றுநேரம் மௌனமாய் ஆலோசித்தான். பின்பு மீண்டும் வினவுகின்றான்.

“ இப்பொழுது நான் நின்றுகொண்டிருக்கு மிடத்தில் யாரேனும் நின்றுகொண்டிருந்தால் அவர்கள் காதுகளில் உங்கள் குரல் எட்டி யிருக்கக்கூடுமோ? ”

“ நாங்கள் அறைக் கதவருகே யிருந்துதான் பேசினோம். ஜன்னலுக்கப்பால் நின்றவர்கள் காதுகள் வரையில் எங்கள் குரல் எட்டியிராதென்றுதான் நினைக்கிறேன். ஆனால் ஒருகால் எட்டியிருந்தாலும் எட்டியிருக்கக்கூடும். ”

“ சரி, இப்பொழுது நீ ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு நீங்கள் அன்று பேசிக்கொண்டிருந்த இடத்திற்குப்போய் என்னவேனும் பேசு. உன் பேச்சு எனக்குக் கேட்கிறதா பார்ப்போம். ”

சாவித்திரி தலைகுனிந்தவாறே சாளரக் கதவுகளை மூடிவிட்டுத் தன் படுக்கையருகே சென்று “ ரமணீ! ரமணீ! ரமணீ! ” என்றனள். பின்பு மீண்டும் ஜன்னலருகே சென்று கதவுகளைத் திறந்தாள்.

“ நீ என்னசொன்னாய்? ” என வினவினன் ஜனார்த்தனன்.

“ ரமணீ! ரமணீ! ரமணீ! ” என்றேன்.

“ சாவித்திரீ! இதுவரையில் ரமணி காணாமற்போன மாயத்தைக் கண்டுபிடிக்கும் மார்க்கத்தை அறிந்துகொள்வதற்காக உன்னை இத்தனை கேள்விகள் கேட்டேன். இனி உன்னுடைய துக்கத்தைப்பற்றி ஒரு வார்த்தையேனும் பேசாமற் போய்விட்டால் நீ என்னைச் சுயநலத்தையே கருதும் மிருகமாக மதிப்பாய். ஆனால் நான் உன்னைப்பற்றி விசாரிப்பதே சரியல்லவென்று ஒருகால் நீ எண்ணினால் நான் உடனே போய்விடுகிறேன். ”

ஒண்டொடி ஒன்றும் பேசவில்லை.

“ சரி, நான் போய்வருகிறேன் ” எனச் சொல்லி ஜனார்த்தனன் அகன்றுபோவதற்கு அடியெடுத்தனன்.

உடனே, "நீங்கள் என்னவேண்டுமானாலும் கேளுங்கள் சொல்லு கிறேனென்று அப்பொழுதே சொன்னேனே" எனச் சற்றுத் தலை நிமிர்த்திக் கூறி மீண்டும் தலைகுனிந்தனள் சாவித்திரி.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

## கள்ளைவிற்றுக் கலப்பணம் சம்பாதிப்பதிலும், கஸ்தூரிவிற்றுக் கால்பணம் சம்பாதிப்பதுமேல்.

இவ் வாக்கியத்தின்கண்ணுள்ள "கள் விற்றல்" என்பது மற்றெல்லாப் பாவத்தொழில்களுக்கும் உபலக்ஷணமாம்.

அந்நிய நாடுகளுக்குக் கூலிவேலைசெய்து பிழைக்கும்பொருட்டுச் செல்லும் நம் இந்திய ஏழை ஜனங்கள் அங்குப்படுங் கஷ்டத்தைப்பற்றி நம் தேசாபிமானிகள் பத்திரிகைகளின் வாயிலா யறிவித்திருப்பதை நினைக்குந்தோறும் நெஞ்சம் பகீரென்கின்றது, துடிக்கின்றது, துன்புறுகின்றது.

இங்ஙனமாக, சென்ற சில தினங்கட்கு முன் நாகைப்பட்டினம் துறைமுகத்தில் 2,500 பேருக்குமேல் அந்நிய நாடுகளுக்குக் கூலிவேலை செய்வதற்கென்று (எமிகிரேஷன் வர்த்தகர்களால்) கப்பல் ஏற்றப்பட்டார்களாம்.

என்ன அநியாயம்! என்ன அநியாயம்!!

பிழைப்பின்பொருட்டுக் கூலிவேலைசெய்யும் ஏழை ஜனங்கள் அநேகமா யெழுதப் படிக்கத் தெரியாதவர்கள். சிலர் எழுதப் படிக்கத் தெரிந்தாராயினும் பத்திரிகைகளை வாங்குதற்கு அவர்களுக்குப் பணங் கிடைப்பதில்லை. சில சமயம் இலவசமா யெந்த விதத்தாலாவது கிடைத்தாலும் அதனைப் படிப்பதற்கு அவகாசங் கிடைத்த லரிது. இப்படிப் பட்ட பல நிர்ப்பந்தங்களால் அந்நிய நாடுகளில் நம் தேச ஏழை ஜனங்கள் படுங் கஷ்ட மவர்கட்குத் தெரிதற் கிடனின்று. ஆயினும்,

இக் கூலியாட்களைச் சேர்த்து அந்நிய நாடுகளுக்கு அனுப்பும் வர்த்தகர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிற்றே! அவர்கள் தங்களா லனுப்பப்படும் ஜனங்கள் அங்குப் படுங் கஷ்டத்தைப் பத்திரிகை வாயிலா

யுணர்ந்திருப்பார்களன்றோ! அவர்களேன் யோசிக்கக்கூடாது? அவர்கள் நம் தேச பொதுஜனங்களின் சுக துக்கங்களில் பாத்தியதை யுடையவரன்றோ! தங்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளின் சுக துக்கங்கட்கு மாத்திரந்தான் அவர்கள் பாத்தியதை யுடையார்போலும்.

ஆ! என்ன வன்கண்மை! என்ன வன்கண்மை!!

நம் பொதுஜனங்க ளியாவரும் நம் தேச மாதாவின் அருமைப் புதல்வர்களன்றோ! இஃதவர்கட்குப் புலப்படாமை எத்தனை தௌர்ப்பாக்கியம். புலப்பட்டிருப்பின் தம் சகோதரர்களைப் பிறதேச வாசிகளாகிய வன்கணாளர்க்கு அடிமையாக்கும் இக்கொடிய வர்த்தகத்தினின்றும் விலகி,

" கள்ளைவிற்றுக் கலப்பணஞ் சம்பாதிப்பதிலும்,
கஸ்தூரிவிற்றுக் கால்பணஞ் சம்பாதிப்பதுமேல். "

என்ற பழமொழியை யுணர்ந்து வேறு தொழிலில் நுழைந்திருப்பார்களன்றோ! இதனால் சர்வ பிராணிகளும் ஒரே கடவுளின் குழந்தைகள் தானென்னும் உணர்ச்சி யிவர்கட்கு வெகுதூரத்ததாமென மதித்தற் கிடந்தருகின்றதே. இவ் வுணர்ச்சி நமக்குப் பெருகுதற்கன்றோ நம் சாத்திரங்களில் " சீவகாருண்ய வொழுக்கம் " என்னும் பொது வொழுக்கம் மற்றெவற்றினுஞ் சிறப்பாய் "அஹிம்ஸாபரமோதர்ம:" என்று பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வொழுக்க முடைமையாலல்லவா ஐரோப்பிய கனவான்களி லநேகர் நம் தேச ஜனங்களையும் தம் சகோதரரெனப் பாவித்து நம் ஜனங்களின் கஷ்ட நிவர்த்திக்காக உழைக்கின்றனர். இதை நம் தேசவாசிகளான எமிகிரேஷன் வர்த்தகக் கம்பெனியார் யோசிக்கவில்லையே!

எப்போ திவ் வர்த்தகர்கள் இவ் விஷயத்தில் ( நம் மேழை ஜனங்கள் அந்நிய நாடுகளில் படுங் கஷ்ட நிவர்த்தியில் ) கவலையெடுத்துக் கொள்ளவில்லையோ, இனியும் அவர்களால் நன்மை யுண்டாதல் முயற்கோடுதான்.

ஆகலின் தேசாபிமானிகளாகிய அறிஞர்கள் இனி இது செய்தலவசியமாம். யாதெனின்,

ஏழை ஜனங்கள் பத்திரிகைகளை வாசித்துப் பார்ப்பதற்கு மேற்பேசியுள்ள பல காரணங்களால் அவகாசமில்லை. தனிகருள்ளுஞ் சிற்சிலரே பத்திரிகைகள் வாங்குகின்றனர். அவர்களுள்ளும் "இந்தப் பத்திரிகை நமக்கு வருகின்றது, அந்தப் பத்திரிகை நமக்கு வருகின்றது " என்று பெருமை பேசுதற்குப் பத்திரிகை வாங்குபவர்கள் பலர். அநேகர் பத்

திரிகைகளி லெழுதப்பட்டுவரும் நாவல்களை மாத்திரம் பிரியமாய்ப் படித்துவிட்டுப் பத்திரிகையைக் கீழே போட்டுவிடுவோரா யிருக்கின்றனர். பத்திரிகைகளை முழுமையும் படித்துப் பயனடைவோர் மிகச் சிலரே.

இங்ஙனம் படிப்பவர்களில் சிலரை ஏழை ஜனங்கள் சந்தித்து "ஐயா, இந்த வாரப்பத்திரிகையி லென்ன விசேஷம்" என்று கேட்கும் போது "போடாபோ, அவைகளைச் சொன்னால் உனக்கென்ன தெரியும்; கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன்?" என்பதாதி வசனங்களால் கடுகடுத்துப் பேசியதை யான் கேட்டிருக்கின்றேன். இப்படிச் சொல்ப வர்கள் விவேகிகளென மதிக்கப்பட்டவர்களே. இங்ஙனமாயின் ஏழை ஜனங்கட்கு அவர்களைப்பற்றிப் பத்திரிகைகளி லெழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் எங்ஙனம் தெரிதற்கிடனும்.

ஆகையால் இதைப்பற்றிப் பத்திரிகைகளி லெழுதுவதோடு நில்லாமல் ஏழை ஜனங்கள் வசிக்கு மிடங்களில் சென்று அவர்களை ஒன்று கூட்டி வைத்துக்கொண்டு உபந்யாச மூலமாய் அன்னிய நாடுகளில் நம் ஏழை ஜனங்கள் படுங் கஷ்டத்தையும் அதைப்பற்றிய மற்றும் விவ ரங்களையும் தெரிவித்தல் வேண்டும். இதை யடியேன் தேசாபிமானிக ளாகிய ஜீவகாருண்யசீலரான சொல்வன்மையுடைய அறிஞர்கள் சமுகத் தில் தெரிவித்துக்கொண்டேன்.

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல — வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

இதோபதேசி.

---

# இலக்கியப் பகுதி.

## மணிமேகலை.

### உதையகுமரன் அம்பலம் புக்க காதை.

(பதினெட்டாவது மணிமேகலை அம்பலமடைந்தமை
சித்திராபதி உதையகுமானுக்குச் சொல்ல
அவன் அம்பலம் புக்க பாட்டு.)

(தொடர்ச்சி.)

128 – 135. என்னமர் காதல னிராகுல னீங்கிவன்
தன்னடி தொழுதலுந் தகவென வணங்கி

யறைபோய் நெஞ்ச மவன்பா லணுகினு
மிறைவளை முன்கை யீங்கிவன் பற்றினுந்
தொன்று காதலன் சொல்லெதிர் மறுத்த
னன்றி யன்றென நடுங்கினண் மயங்கிக்
கேட்டது மொழிவேன் கேள்வி யாளரிற்
றோட்ட செவியைநீ யாகுவை யாமெனின்

இ—ள். உதையகுமரன் கேட்டலும், மணிமேகலையானவள், "இவன் என்னை விரும்பிய கணவனாகிய இராகுலனாவான்; இவனுடைய அடிகளை வணங்குதலும் முறை" என்று நினைத்து வணங்கி, "நெஞ்சம் ஓட்டைபோய் இவன்பா லணுகினாலும் வளையலை யணிந்த முன்கையை யிவன் பற்றினாலும் பழமையான கணவனுடைய சொல்லை யெதிர்மறுத்தல் நன்மையன்று" என்று நடுங்கினளாய் மயங்கி, உதையகுமரனை நோக்கி, "நீ கேள்வியாளர்களால் துளைக்கப்பட்ட செவியை யுடையாயாயின் நீ கேட்டதற்கு விடைகூறுவேன்.

இவன் என்னை விரும்பிய கணவனாகிய இராகுலனாவான்; என்றது பழம்பிறப்பின் செய்தி கூறியபடி. பழம்பிறப்பில் உதையகுமரன் அத்திபதியென்னும் அரசனுக்கு நீலபதி வயிற்றிற் பிறந்த இராகுலனென்றும் இலக்குமியின் கணவனென்றும், மணிமேகலை இரவிவன்மனுக்கு அமுதபதி வயிற்றிற் பிறந்த இலக்குமியென்றும் இராகுலனுடைய மனைவியென்றும் தெரிகிறது.

கேள்வியாளரால் துளைக்கப்பட்ட செவி — கேள்விச் செல்வத்தை யுடைய செவி. "கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற் றோட்கப் படாத செவி" என்னுந் திருக்குறளின் பொருள் இங்கு அமைந்திருத்தல் காண்க.

(மேல்வருவன மணிமேகலை கூற்று.)

136 – 150. பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலு
மிறத்தலு முடைய திடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்
மண்டமர் முருக்குங் களிறனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேரறி வுண்டோ
கேட்டனை யாயின் வேட்டது செய்கென
வாட்டிறற் குரிசிலை மடக்கொடி நீங்கி
முந்தை முதல்வி முதியா ளிருந்த

288



குச்சரக் குடிகை தன்னகம் புக்காங்
காடவர் செய்தி யறிகுநர் யாரெனத்
தோடலர் கோதையைத் தொழுதன ளேத்தி
மாய விஞ்சையின் மந்திர மோதிக்
காயசண் டிகையெனுங் காரிகை வடிவாய்
மணிமே கலைதான் வந்து தோன்ற

இ — ள். "மக்கள் உடம்பாகிய இது, பிறத்தலையும் முதுமை யடைதலையும் நோயுற்று வருந்துதலையும் இறத்தலையும் உடையது, துன்பத்திற்குக் கொள்கலமாயுள்ளது என்று அறிந்து மிகுந்த தயாதருமத்தை விரும்புதல் செய்தேன். மிக்குச் செல்லுகின்ற போரை அழிக்கும் ஆண் யானையை நிகர்த்தவர்கட்குப் பெண்கள் சொல்லும் பேரறிவுளதோ? இல்லை. கேட்டுத் தெளிந்துள்ளாயானால் நீ விரும்பியது செய்க" என்று மணிமேகலை வாட்போரில் வல்ல உதையகுமரனை நீங்கி, சம்பாபதி யெழுந்தருளிய கோயிலில் தனதிடத்திற் புகுந்து, காமுகராகிய ஆண் மக்கள் செய்கையை அறிபவர் யாரென்று நினைத்து, சம்பாபதியைத் தொழுது துதித்து, மாயவித்தையையுடைய மந்திரத்தை ஓதி, காய சண்டிகையென்னும் பெண்ணின் வடிவங்கொண்டு அமுத சுரபியை யேந்தி வெளியே வந்து நின்றனள்.

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது, புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது, மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை, பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம், புற்றடங் காவிற் செற்றச் சேக்கை, யவலக் கவலை கையா றழுங்க, றவலா வுள்ளந் தன்பா லுடையது, மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து, மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" என்று இந்நூலுள்ளே முன்னும் மக்கள் யாக்கையை யிழித்துக் கூறியுள்ளது.

"களிறனையார்க்குப் பெண்டிர் கூறும் பேரறிவுண்டோ" என்றது முன்னிலைப்புறம். மடக்கொடி — மணிமேகலை. முந்தை முதல்வி முதியோள் — சம்பாபதி. குச்சரக்குடிகை — (கூர்ச்சரகுடிகா) கூர்ச்சர தேசத்துப் பணியமைந்த சிறிய கோயில். கூர்ச்சரதேசம் சிற்பத்திற் பெயர்பெற்றதென்பர். தோடலர்கோதை — சம்பாபதி. மந்திரம் — மணிமேகலாதெய்வம் உபதேசித்த (வேற்றுரு எய்துவிக்கும்) மந்திரம்.

(மேல்வருவன உதையகுமரன் கூற்று.)

151 – 158. அணிமலர்த் தாரோ னவள்பாற் புக்குக்
குச்சரக் குடிகைக் குமரியை மரீஇப்
பிச்சைப் பாத்திரம் பெரும்பசி யுழந்த

காயசண் டிகைதன் கையிற் காட்டி
மாயையி னொளித்த மணிமே கலைதனை
யீங்கிம் மண்ணீட் டியாரென வுணர்கே
னாங்கவ ளிவளென் றருளா யாயிடிற்
பன்னா ளாயினும் பாடு கிடப்பேன்

இ - ள். அவள் வேற்று வடிவங்கொண்டு வந்ததை யறியாத உதையகுமரன் அவளிடத்துச் சென்று, குச்சரக்குடிகையி லெழுந்தருளி யுள்ள சம்பாபதியை யணுகி, “பிச்சைப் பாத்திரத்தைப் பெரும்பசிகொண்டு வருந்திய காயசண்டிகையின் கையிற் கொடுத்துவிட்டு மாயையினா லொளித்த மணிமேகலையை ஈங்குள்ள இவ்வளவு பாவைக் கூட்டங்களுள் யான் எவ்வாறு தெரிந்துகொள்வேன்; நீ எனக்கு அவளைக் காட்டா யாயின், பல நாளாயினும் ஆகுக, இவ்விடத்திலேயே பாடுகிடப்பேன்.

அணிமலர்த்தாரோன் – உதையகுமரன். அவள் என்றது, காயசண்டிகை வடிவுகொண்டு நின்ற மணிமேகலையை. குமரி – சம்பாபதி. மண்ணீடு – சுதையாற் செய்யப்பட்ட பாவை. பாடுகிடத்தல் – வரம் பெறுதற்குக் கிடத்தல். பாடு – படுக்கை.

( இனி, உதையகுமரன் மணிமேகலையின் நகை முதலியவற்றால் தான் வலியழிந்து அவளுக்கு வயப்பட்டமை கூறுவான், தன்னை யானையாகவும் அவள் நகை முதலியவற்றை யானையை யடக்கி வயமாக்கும் கருவிகளாகவும் உருவகம் செய்து கூறுகின்றான். )

159 – 172. இன்னுங் கேளா யிமையோர் பாவாய்
பவளச் செவ்வாய்த் தவளவா ணகையு
மஞ்சனஞ் சேராச் செங்கய னெடுங்கணு
முரிந்துகடை நெரிய வரிந்தசிலைப் புருவமுங்
குவிமுட் கருவியுங் கோணமுங் கூர்நுனைக்
கவைமுட் கருவியு மாகிக் கடிகொளக்
கல்விப் பாகரிற் காப்புவலை யோட்டி
வல்வா யாழின் மெல்லிதின் விளங்க
முதுக்குறை முதுமொழி யெடுத்துக் காட்டிப்
புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்தென
முதியா ளுன்றன் கோட்டகம் புகுந்த
மதிவாண் முகத்து மணிமே கலைதனை
யொழியப் போகே னுன்னடி தொட்டே
னிதுகுறை யென்றன னிறைமகன் றானென.

இ – ள். தேவர்களுடைய தலைவியே! இன்னுங் கேட்பாயாக; பவளம்போலும் சிவந்த வாயினது வெள்ளிய ஒளிபொருந்திய புன்னகையும், மையெழுதப்பெறாத செவ்விய கயல்போன்ற நெடிய கண்களும், வளைந்து கடைநெரியும்படி கட்டிய விற்போன்ற புருவமும், முறையே குவிமுட்கருவியும், அங்குசமும், கூரிய முனைபொருந்திய கவைத்த முள்ளையுடைய பரிக்கோலுமாகிக் காவல்கொள்ள, கல்வியாகிய பாகர்களால் காத்தலாகிய வலையைப்போக்கி, வீணையின் ஓசைபோல இனிமையாக மொழிகளை யெடுத்துக்காட்டி, புதிதாகக் கொள்ளப்படும் யானை வேட்டையி லகப்பட்டதென்று கருதி, பெரியோய்! உனது கோயிலிற் புகுந்த ஒளிபொருந்திய சந்திரன்போன்ற முகத்தையுடைய மணிமேகலையை இவ்விடத்திலே விட்டுவிட்டு நான் மட்டும் போகேன்; உன் திருவடியைத் தொட்டேன்; இஃது எனக்கு வேண்டுங் காரியம் என்று கூறினன் உதையகுமா னென்க.

குவிமுட்கருவி முதலிய மூன்றும் யானையை யடக்கும் ஆயுத விசேடங்கள். கோணம் – அங்குசம். நகை குவிமுட்கருவியும், கண் கோணமும், புருவம் கவை முட்கருவியுமாகிக் கடிகொளவென வியைக்க; இது நிரனிறை. யானை வீணைக்கு வயமாகுமாதலின் அங்ஙனம் கூறினன்; இதனைப் பின்வரும் மேற்கோளா லுணர்க "அணியிழை மகளிரும் யானையும் வணக்கு, மணியொலி வீணை" என்பது பெருங்கதை, உஞ்சைக்காண்டம், நருமதைச் சம்பந்தம். முதுக்குறை முதுமொழி – பேரறிவைப் புலப்படுத்திய மொழி; என்றது "பிறத்தலு மூத்தலும்" என்பது முதலியவற்றை. "புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்தென" இது மணிமேகலையின் உட்கோளென்று உதையகுமரன் கருதினான். முதியாள் – விளிப்பெயர். அடிதொடுதல் – சூளுறவுகளுள் ஒன்று. குறை – வேண்டுங் காரியம். இறைமகன் – உதையதுமரன்.

உதையதுமரன் அம்பலம் புங்க காதை முற்றிற்று.

பத்திராதிபர்.

# இலக்கணப் பகுதி.

## தொல்காப்பியம்.

நச்சினார்க்கினியம்.

### பொருளதிகாரம்.

*மரபியல்.*

ச. அவற்றுள்,

பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.

இது நிறுத்த முறையானே இளமைப் பெயருள் முற்கூறிய பார்ப்பினைக் கூறுவான் அதனே டொப்புமை கண்டு பிள்ளைப் பெயருங் கூறுகின்றது.

இ—ள். பார்ப்பு, பிள்ளை இவ்விரண்டும் பறவை யிளமைக்குரியன எ-று. இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலின் சான்றோர் செய்யுளுட் காணப்படும். அல்லன வழக்கின்மேற் காட்டுதும்.

"மேற்காட்டிருந்த பார்ப்பினங்கள்"

"இல்லிறைப் பள்ளிதம் பிள்ளையொடு வதியும்"

"பைதற் பிள்ளைக் கிளிபயிர்ந் தாங்கு"

இவை பருந்தும் ஊர்க்குருவியும் கிளியுமென்னும் பறவைமேல் வந்தன. பிறவுமன்ன. புள்ளுக்குலம் பலவாகலான் இச் சூத்திரத்துள் அடங்கிய மரபு எத்துணையும் பலவாதனேக்கி முதற் சூத்திரத்துட் பார்ப்பினை முற்கூறினனென்பது.

ரு. தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன.

இ—ள். பார்ப்பும் பிள்ளையும் தவழ்பவற்றிற்கும் உரியன எ-று.

அவை ஆமையும் உடும்பும் ஓந்தியும் முதலையும் முதலாயின. ஆமையும் முதலையும் நீருள்வாழினும் நிலத்தியங்குங்கால்தவழ்பவையெனப்படும்.

*உதாரணம்.*

"யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே"

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை"

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளை தின்னு முதலைத்தவ ரூரே"

எனவரும். தாமுமென்றதனால் ஊர்வன நடப்பனவும் சிறுபான்மை பிள்ளைப் பெயர்க்கு உரியனகொள்க. அது "பிள்ளைப் பாம்பு" என ஊர்வனமேல் வந்தது. "பிள்ளை வெருகிற் கல்கிரையாகி" என நடப்பனமேல் வந்தது. மூங்காப்பிள்ளை யென்பதும் ஈண்டே கொள்ளப்படும். பார்ப்பும் அவ்வாறு வருவன உளவேற்கொள்க. இதுவும் தவழுஞ் சாதிக்கெல்லாம் பொதுவாகிய பரப்புடைமையின் இரண்டாவது வைத்தானென்பது.

ஊ. மூங்கா வெருகெலி மூவரி யணிலோ
டாங்கவை நான்குங் குட்டிக் குரிய.

இதுமேல் எடுத்தோத்தானும் இலேசானும் அதிகாரப்பட்ட தவழ்வனவும் நடப்பனவும் பற்றிக் குட்டியென்னும் பெயரினையு முறையன்றிக் கூறுகின்றது.

இ—ள். மூங்கா, வெருகு, எலி, அணில் இவை நான்கும் குட்டியெனப்படுவன எ-று. அவை மூங்காக்குட்டி, வெருக்குக்குட்டி, எலிக்குட்டி, அணிற்குட்டி யெனவரும். மூவரி யணில் என்றதனால் ஒழிந்த மூன்றும் தம்முள் ஒரு பிறப்பினவாம், இவை ஒரு நிகரனவே என்பது கொள்க. ஆங்கவை நான்கும் என்றதனால் தத்துவனவற்றிற்கும் குட்டிப்பெயர் கொடுக்கப்படும். தவளைக்குட்டி யெனவரும். மேல் ஊர்வனவற்றிற்கும் தவழ்வனவற் றிலக்கணம் எய்துவித்தமையால் பாம்புக்குட்டி யென்பதுங் கொள்க. மற்றுக் கீரியும் நாவியும் போல்பவற்றையும் குட்டியென்னாரோவெனின், அவை பிள்ளையென்றலே பெரும்பான்மையாகலின் உரியவென்றதனாற் சிறுபான்மை குட்டியென்பதுங் கொள்க. மூங்காவின் விகற்பமென்பாருமுளர்.

இலக்கணக்குட்டி.

---

## சாத்திரப் பகுதி.

### மங்கலம்.

(தொடர்ச்சி.)

அகங்கார மொப்பச் சித்தமும் மனமும் மங்கலகாரண மாகாதென்க, மற்றேறு துக்ககாரணமேயாம். வீடவாவினரால் வீடடைவான் இன்றியமையாது செய்யற்பாலதாய ஆன்றோர் சேவையை அகலவிட்டு

மனமானது காற்குட்பட்ட கண்மயிற் ரேகைபோல் அவா முதலிய குற்றங்களான் வலிமையற்றதாய் அலையுமியற்கையையே அடைவுற் றலமருகின்றது.

உள்ளமானது ஊர் ஞமலிபோலக் கூடுங் கூடாதென்னும் ஓர் விண்மையின் வியாகுலத்தையும், ஓரிடத்திலுந் தன் னிறைவிற் கேதுவொன்றுங் கிட்டாமையின் தீனதையையும் உற்று ஈண்டும் ஆண்டும் நெடுந்தூரம் வாளா ஓடி விடயங்களி லடிபடுகின்றது. அங்ஙன மோடி வாடினும் ஓரிடத்தும் ஒரு சிறிது பயனையும் அடைவதின்றாம். சிறந்த செல்வஞ் செறிந்தபோதிலும் வம்சப் பேடகம் நீரால் நிறைவுறாதது நிகர்ப்ப நிறைவுறுவதின்றாம். எஞ்ஞான்றும் பேரவா வலையாற் பிணிக்கப்பட்ட மனம், தன்னினந் தணந்த உன்னத மான்போல் இன்பமே பம்பா திரிந்து வாடும். யந்தா மலையின் மதனத்தாலே நந்துற வுயர்ந்து நலிந்து கிளம்பிய பாற்கடற் பால்போற் பாவ மனந்தான் விடய சிந்தனையால் வெறிது கலங்கித் திசைகளோர் பத்திலுந் திரிந்து வாடும்.

போக ஆதியத்தாங் களிப்பலைகளினும் கோணற்சுழி பலபேணிப் பணிப்பதும் பிறரை வஞ்சிக்கும் பேருபாயமாம் மகர மச்சங்களான் மருவி வருவதும் ஆய விம்மனமாம் ஆழ்ந்தஆழியைத் தடைசெயற்கெவரே சமர்த்தராவர்.

மனமாகிய மான் நரகப் படுகரில் வீழ்வதை யெண்ணு தாகபோகப் புன்னுனி விழைந்து நெடுந்தூரஞ் சேர்ந் தடிபடுமன்றே.

தரங்கவாழி சஞ்சலந் தணவாதென்ன மனந்தான் எந்த ஞான்றும் சஞ்சலமதனைத் தணத்தலேயில்லை. சிறையிற்பட்ட சிங்கப் பறழ்போற் சஞ்சல வியற்கைத்தாய மனந்தான் பற்பல சிந்தையாற் பல சஞ்சலமுற்றற்ப வோரிடத்து மமர்ந்திராதன்றே. அன்னம் நீரி னமர்ந்த வமுதைக் கவர்வதேபோலக் காயத்துள்ள சருவ சமமாம் தகுந்த சிவன் முத்திச் சுகத்தை மோகமாந் தேர்மே லேறிக் கவரவே யெண்ணித் திரியும்.

( இன்னும் வரும். )

வீர. சு.

---

## நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

43 பலால தான்யார்த்தி நியாயம்: — பலாலம் – வைக்கோல், தான்யார்த்தி – தானிய விருப்புடையான், நியாயம் – திருஷ்டாந்தம்.

இது சாஸ்திரப் பிரதிபாதித வஸ்து ஞானனந்தரம் சாதன ரூப சாஸ்திரங்களைக் கைவிட லிதுபோல வென்கின்றது. அதாவது: எங்ஙனம் தானிய விருப்புடையோன் தானியத்தை (நெல்லை)க் கிரகித்துக் கொண்டு வைக்கோலை நீக்கிவிடுவானோ அதுபோல வென்பதாம்.

44. க்ஷீரோதக நியாயம்: — க்ஷீரம்–பால், உதகம் – ஜலம், நியாயம் – திருஷ்டாந்தம். இது பெரியாரைச் சார்ந்த சிறியார் பெரியாராகவே மதிக்கப்பட லிதுபோலவென்கின்றது. அதாவது: பாலுடன் சார்ந்த நீர் பாலாகவே மதிக்கப்படுவதுபோல வென்பதாம்.

45. இராகு கிரஸ்த சசாங்க நியாயம்: — இராகு–இராகுவென்னும் சர்ப்பத்தால், கிரஸ்த – பிடிக்கப்பட்ட, சசாங்க: – சந்திரன், நியாயம் – திருஷ்டாந்தம். இது உபகார குணமுடையார் தாம் துன்புறுங் காலத்திலும் தம்மால் இயன்றவரையில் பிறர்க் குதவிசெய்வாராத லிது போலவென்கின்றது. அதாவது: சந்திரன் இராகுவினால் ஒருபுறம் பிடிக்கப்பட்டபோதும் தனது மற்றொருபுறத்தால் உலகிற்குக் குளிர்ந்த கிரணத்தை வீசி உபகரிப்பதுபோல வென்பதாம்.

46. சுப்த ஹஸ்தஸ்த புஷ்ப நியாயம்: — சுப்த: – தூங்குபவன், ஹஸ்தஸ்த – கையிலுள்ள, புஷ்ப: – புஷ்பம், நியாயம் – திருஷ்டாந்தம். இது பெரியாரால் சங்கல்ப பூர்வமாய்ச் சற்கருமங்கள் விடப்படாமல், சிவத்தியானத்தால் அவை அவரினின்றும் நீங்கிப்போத லிதுபோலவென்கின்றது. அதாவது: தூங்குபவன் கையிலுள்ள புஷ்பமானது அவனறியப்படாது நழுவிப்போதல்போல வென்பதாம்.

(இன்னும் வரும்.)

அநந்தபத்மநாபஸ்வாமி

காஞ்சீபுரம்.

---

## கப்பற்காரன் பேச்சு, காற்றடித்தால் போச்சு.

அன்பர்காள்,

நாம் "கப்பற்காரன் பேச்சு, காற்றடித்தால் போச்சு" என்னும் இப் பழமொழியைக் கேட்டிருக்கின்றோம். அங்ஙனமே கண்டுமிருக்கின்றோம். அதாவது: காற்றடித்தலால் கப்பல் சிதறுண்டு கப்பற்காரனும் கடலில் மூழ்கித் துன்புறுவதை யறிந்திருக்கின்றோம். ஆனால் எத்தகைய காற்று மேற்பேசிய விபத்துக் கிடமாமென்பதை யோசித்துப் பார்க்கின்,

நெறியல்லாத நெறியில் கப்பலைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்ற பெருங் காற்று (புயல் காற்று)த் தான் விபத்துக் கிடமாமென்பதை யறிவோம். அன்றியும் கப்பலைச் சரியான மார்க்கத்தில் செலுத்திக்கொண்டு போதற் குரிய மிதமான காற்று அநுகூலக் காற்ருகலின் அது சம்பத்துக்கே சாதனமா மென்பதையு மறிவோம்.

அதுபோல நாம் இச் சம்சார சமுத்திரத்தைக் கடந்து முத்திக் கரையை யடைதற்பொருட்டுக் கீழ்ப்போன பல பிறவிகளில் பரமேசுவா னிடம் யாசித்துப் பெற்ற இம் மானிட சரீரமாகிய கப்பலானது, நம் தாயுமானுரால் கூறப்பட்ட ( விஷய ) ஆசையெனும் பெருங் காற்றின் வசமாயிடின் கேடுறுமாகலின் அதுகொண்டு முத்திக் கரை சேரவேண் டிய நாம் சம்சாரக் கடலிடை மூழ்கி வருந்துவோம்; ஆகலின் விஷ யேச்சையானது துன்ப சாதனமாம். மோக்ஷேச்சையோ அநுகூலகாரி யாகலின் இன்ப சாதனமாம். ஆதலால் மோக்ஷத்தின்கண் ணுண்டாம் ஆசையாகிய அநுகூலக் காற்றினை நம் மனுகாயத்தி லெழுப்பி முத்திக் கரையைச் சேர முயலல்வேண்டும்.

கப்பற்காரனுனவன் இப் பூதாகாயத்தி லெழுகின்ற பிரதிகூலக் காற்ருகிய பெருங் காற்றை யுண்டாகா வண்ணந் தடுக்கவும், உண்டான புயல்காற்றை யடக்கவும், அநுகூலக் காற்றினை யுண்டாக்கிக்கொள்ளவும் அசமர்த்தன்.

நாமோ நம் மனுகாயத்தி லெழுகின்ற விஷய ஆசையெனும் பெருங் காற்றை யுண்டாகா வண்ணந் தடுத்துக்கொள்வதற்கும், உண் டான அதை யடக்கிக்கொள்வதற்கும், மோக்ஷ விருப்பம் என்னும் அநு கூலக் காற்றினை யுண்டாக்கிக்கொள்வதற்கும் சாமர்த்திய முடையோ ராக நிரேதுக கருணுநிதியாகிய பரமேசுவரனுல் சிருஷ்டிக்கப்பட்டிருக் கின்ருேம்.

விஷயேச்சையாகிய பெருங்காற் றுண்டாகா வண்ணஞ் செய்து கொள்வதற்கும், உண்டான அதை யடக்குதற்கும் நிஷ்காம சற்கருமோ பாசனைகள் உபாயமாம். மோக்ஷ விருப்பமாகிய அநுகூலக் காற்றை யெழுப்பிக் கோடற்குச் சாதுசங்கம் சாதனமாம்.

புயல்காற் றடிக்குங்காலத்தில் விவேகியாகிய கப்பற்காரன் எங் ஙனம் வெகு ஜாக்கிரதையோடும், மிகு ஊக்கத்தோடும், அதி விவேகத் தோடும் கப்பலை ஹார்பர் முதலிய ஸ்தானங்களில் கொண்டுபோய் நிறுத் துதலாதி உபாயங்களால் இரக்ஷிப்பானே அங்ஙனம் விவேகியான இச் சரீரமாகிய கப்பற்குடையானும் விஷய ஆசையெனும் புயல்காற்று மனு

காயத்தில் கிளம்பும்போது வெகு ஜாக்கிரதையாய் மிகு ஊக்கத்துடன் அதி விவேகத்தால் இச் சரீரமாகிய கப்பலைக் கடவுள் வழிபாடு, தூற்குரு பணிவிடை யென்பவற்றின்கண் செலுத்தி நிறுத்திக் காப்பாற்றவேண்டும். இல்லையேல் புயல்காற்றினால் தீ நெறிச் செல்லுகின்ற கப்பலானது எங்ஙனம் கடலின்கண்ணுள்ள மலை முதலியவற்றின் மோதி யுடைபட்டுக் கப்பற்காரனுக்குப் பெருந் துன்பத்தை யுண்டாக்குமோ அங்ஙனமே விஷயேச்சையால் கொடுவழி செல்லுகின்ற இச் சரீரமாகிய கப்பலானது விஷயங்களில் மொத்துண்டு சிதைந்து அதனால் சரீரியாகிய நமக்குப் பெருந் துன்பத்தை யுண்டாக்கும்.

கேடுற்ற கப்பலைக்கொண்டு கப்பற்காரன் அக்கரை சேரமாட்டாமல் கடலினிடத்தே மூழ்கி வருந்துவதுபோல, கேடுற்ற சரீரியும் முத்திக் கரையை யணுகமாட்டாது சம்சாரக் கடலிடையே மூழ்கி வருந்துவான். ஆகையால் பரமேசுவரனால் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள சக்தியை (விஷய ஆசையாகிய பிரதிகூலக் காற்றைக் கெடுப்பதிலும், முத்தி விருப்பம் என்னும் அநுகூலக் காற்றை யுண்டாக்கிக்கொள்வதிலும் நமக்குள்ள சாமர்த்தியத்தை) யும், அதனால் நாம் பெறவேண்டிய நன்மை முத்தி யின்ப மொன்றேயாம் என்பதையும் மகான்களை யடுத்துச் செய்யும் நூலாராய்ச்சியால் நன்குணர்ந்து விஷயங்களி லெழும் ஆசையைத் திருப்பி முத்தியின்கண் செலுத்திச் சம்சாரக் கடலைக் கடந்து முத்திக் கரையை யடைந்து இன்புறக் கடவோமாக. சுபம்.

இதோபதேசி.

---

## வைத்தியக் குறிப்பு.

கைகால் குடைச்சல்: — பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுகிற ஒவ்வொருவரும் புளியமரத்துப் பட்டையைக் கொண்டுவந்து சுத்தமான தரையில் குவித்து நெருப்பிட்டு வெந்தவுடன் நெருப்பை விலக்கி வேலிப்பருத்திச் சாற்றை ஊற்றக் கொதிக்கும். அதை வழித்தெடுத்து அம்மியில்விட்டு அத்துடன் கொஞ்சம் கருக்கிய காட்டுராகி, புழுங்கலரிசி, சுக்கு, குக்கல், சதகுப்பை, சாம்பிராணி, கடுகு, வெள்வெங்காயம் இவைகளை வைத்து மைபோ லரைத்து 2, 3 நாள் பூசிவர நீங்கும்.

மற்றொருவிதம்: — ஆனைக் கத்தாழை மடலை வாட்டிப் பிழிந்த சாற்றில் மேற்கண்ட மருந்துகளைச் சேர்த்து மைபோ லரைத்துப் பூசிவரத் தீரும்.

பின்னும் மற்றொருவிதம்: — மேக சம்பந்தமான வீக்கமும் குடைச்சலுமாக விருந்தால் எருக்கன் பூவில் வேப்பெண்ணெய்விட்டு வண்க்கி வேதடித்துவரத் தீரும்.

இரத்தக்கட்டு: — அடியினாலாவது, தவறிக் கீழே விழுதலினாலாவது, சுளுக்கினாலாவது இரத்தம் சுரந்து அவைகளால் அவஸ்தைப்படுகிற ஒவ்வொருவரும், வேலிக்கால்களில் கள்ளிகளில் உண்டாகும் உருண்டைச் சங்கு வடிவமான "ஊமைச்சி" என்கின்ற நத்தையைப் போதுமானமட்டுங் கொண்டுவந்து கல்வத்திலிட்டு அதில் மேற்றோல்போக்கிய உளுந்துப்பருப்பும் கொஞ்சம் சேர்த்து மைபோ லரைத்து விளக்கெண்ணெய் தேய்த்து வெந்நீரால் கழுவிய இரத்தக்கட்டுள்ள இடங்களில் தடவிவர நாளடைவில் எவ்விடத்தில் இரத்தக்கட்டிருந்தாலும் நீக்கிச் சுகத்தைக் கொடுக்கும்.

தலைப்பொடுகு: — இது உண்டான இடங்களிலுள்ள ரோமங்களை மட்டமாகக் கத்தரித்து இரணங்களுக்கு நல்லெண்ணெயில் கொஞ்சம் மிளகையும் நீலத்துத்தத்தையும் பொடித்துப்போட்டுப் பொங்கக் காய்ச்சித் தேய்த்து இலுப்பைப் புண்ணாக்கிட்டு வெந்நீரில் ஸ்னானஞ் செய்துவரத் தீரும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
மே. முனிசிபல் கௌன்சிலர்
பழநிஸ்தலம்.

---

## சமாசாரம்.

### வெள்ளத்தால் நேர்ந்த விபத்து.

சென்ற நவம்பர் மீ 9-ம் உ இரவு வந்த வெள்ளாற்றின் பெரும் பிரவாகத்தாலும் பெருமாளேரியின் பேருடைப்பின் ஜலம் பரவனாற்றினின்றும் வழிந்து வடிந்து வந்ததாலும் பறங்கிப்பேட்டையின் மேற்பாகங்களிலுள்ள சில குக்கிராமங்களும் ஊரையடுத்த நத்தங்களும் பாழாயின. பல வீடுகளுஞ் சில கால்நடைகளுஞ் சேதமாயின.

சிதம்பரத்திற்கு மேற்றிசையிலுள்ள வீராணத் தேரியும் அதனைச்சார்ந்த பல சிற்றேரிகளுஞ் சில பாகங்களிலுடைந்து, பல சிற்றாறுகளோடு கலந்து பிரவகித்த பெருவெள்ளப் பெருக்கால் தில்லையம்பதிக்குக் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள பல கிராமங்களின் வீடுவாசல்

298



ஆடுமாடு பொன்பொருள் நெற்குவியல் முதலியன சேதமானதோடு, அந்தோ! அநேகம் பிரஜைகளும் ஆற்றோடடிக்கப்பட்டுப் போயினர். இப்பெருங் கொள்ளை, பாதகர் நெஞ்சையும் கவற்றுந் தன்மையுடையதா யிற்று.

சிதம்பரத்திற் சுமார் 1000 வீடுகளுக்குமேல் வீழ்ந்தொழிந்தன. ஆயின், ஆண்டு குடிகளுக்கு ஆபத்து ஒன்றுமில்லை. தேரோடும் வீதி தவிர்த்து மற்றெல்லா வீதிகளிலுஞ் சலஞ் சூழ்ந்ததென்னலாம். ஆயிரக்கான் மண்டபத்து மதைச்சார்ந்த பெருங் கட்டடங்களிலும் பிரஜைகள் யாவரும் காருண்ணிய அரசாங்கத்தாரானும், பிராமணோத்தமர்களானும் தனவைசிய கனதனவான்களானும் போஷிக்கப்பட்டனர்.

அன்று பறங்கிப்பேட்டையிற் றங்கிய போட்மெயில் (Boat Mail) மதுரைப் பாசஞ்சர் டிரெயின் (Madura Express Train) இரண்டிலு முள்ள 500 ஜனங்களுக்குச் சுமார் 4, 5 தினங்கள் வரை இவ்வூர்க் கனதனவான்களால் ஆகாரஞ் செய்விக்கப்பெற்றது. திரிசிராப்பள்ளி டிராபிக் மானேஜ ராபீஸ் ஏஜண்ட் கனந்தங்கிய பெரிய துரையவர்கள் பிரயாணிகளுக்குக் காட்டிய காருண்ணியம் வியக்கற் பாலதே. அக் கனவான் எல்லாப் பிரயாணிகளும் உண்டுகளித்த பின்னரே தாம் உண்டி கொள்வாராயினர்.

இவ்வூருக்கும் ஸ்டேஷனுக்கும் இடையேயுள்ள 2 மைல் வழியிலும் உடைப்புஞ் சலமும் ஒரு மைல் வரையுமிருந்ததால் ஜனங்கட்குப் போசனங் கொண்டுபோவார்க்குச் சிறிது சிரமமிருந்த தென்னலாம். அதனையுங் கருதாது வழிநடந்து போஷித்த இவ்வூர்வாசிகளைப் பரமன் தண்ணருள்கொண்டு கடாக்ஷிப்பாராக. 4, 5 தினங்கட்குப் பின்னர் அப்பிரயாணிகள் யாவரையும் நீராவிக் கப்பலேற்றிக் கூடலூர் மார்க்கமாய்த் தத்தம் ஊர்களுக் கனுப்பிவிட்டனர்.

இத் தொந்தரையால் சுமார் 4, 5 தினங்களாகத் தபாற் போக்குவரவில்லாதிருந்தது. அக் குறையையும் நிவிர்த்திப்பான் வேண்டி இப்போது கடற்றுறை மார்க்கமாய்க் கூடலூருக்கும் ரெயில்பாதை மார்க்கமாய்ச் சிதம்பரத்திற்குந் தபாலை யனுப்பிக்கொண்டிருக்கின்றனர்.

எல்லாம் வல்ல பரசிவன் திருவருளால் இவ்வூர்வாசிகளும் மற்றவரும் இகபர நன்மைகளைப் பெற்றுய்யுமாறு பிரார்த்திக்கின்றனன்.

சு. ஏ. குமாரஸ்வாமி ஆச்சாரி

பறங்கிப்பேட்டை.

299 279



பல கண்காக்ஷிகளில் மெடல்கள்பெற்ற
அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள்கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு
வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

**தாம்பூல விஹாரம்:—** தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதி அவசியமான மனக்களிப்புண்டாகக்கூடிய வாசனைக் கலவை. விலை டப்பா 1-க்கு அணா 4. வி. பி. செலவு 1 முதல் 12 டப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

**சோடாவாடர் பவுடர். —** இச்சூர்ணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்துகொண்டால் அதி உசிதமான சுயமான சோடாவாடர் உண்டாகும். ஒரு சீசாவிலுள்ள பவுடர் சுமார் 8 சீசா சோடாவாடர் செய்யப் போதுமானது. விலை சீசா 1-க்கு அணா 6. வி. பி. செலவு 1 முதல் 4 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

**லெமனேட் பவுடர். —** இச் சூர்ணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்தால் அதி உத்தமமான லெமனெட் தயாராகி விடும். ஒரு சீசாவிலுள்ள சூர்ணம் சுமார் 8 பெரிய சீசா லெமனெட் செய்யப் போதுமானது. விலை சீசா 1-க்கு அணா 6. வி. பி. செலவு 1 முதல் 4 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

**பன்னீர். —** இப் பன்னீர் ½ அவுன்ஸ் சீசாவில் விற்கப்படுகிறது. இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை 3 பெரிய சீசா வெந்நீருடன் கலந்தால் முதல்தரமான 3 சீசா பன்னீராகும். மேன்மையான பன்னீர். விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

**கஸ்தூரிகலந்த லாவண்டர் வாடர். —** எங்களுடைய அவுஷதசாலையில் தயாராக்கப்பட்ட மிகவுஞ் சுகந்த திரவியம். சீர்மையிலிருந்து வரவழைத்து விற்கிற வஸ்துவல்ல. எப்பேர்க்கொற்றவர்களையும் மயக்கக்

300



கூடிய சுவாசனை. வஸ்திரங்களுக்கு உபயோகித்தால் இன்பமான சுகந்தத்தைத் தரும். இந்தச் சுகந்தத்தை 4 துளிகள் உபயோகித்தால் கடைகளில் சாதாரணமாக விற்கும் லாவண்டர் வாட்டரை 20 துளிகள் உபயோகித்தால் எம்மாதிரியான சுகந்தமிருக்குமோ அதைவிட ஜாஸ்தியாக எம்முடைய லாவண்டர் வாட்டர் மனோரம்மியமான சுவாசனையை வீசும். உபயோகித்தவர்களைச் சுற்றி வெகுநேரம் பரிசுத்தமான பரிமளத்தைப் பரவச்செய்யும். ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது. விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

ஓதிகோலோன். — இது சீர்மையிலிருந்து வரவழைத்ததல்ல. எங்களுடைய அவுஷதசாலையில் எங்களால் சுயமாகத் தயாராக்கப்பட்டது. மனக்களிப்பை உண்டாக்கக்கூடிய சுவாசனை. உடம்பில் பூசலாம். வஸ்திரங்களுக்குப் போடலாம். இதை உபயோகித்தால் தலைவலி குணமாகும். தேக சிரமத்தை ஆற்றும். வெகுநேரம் வாசனை தங்கி உபயோகித்தவர்களைச் சுற்றி வாசனை பரவியிருக்கும். சாதாரணமாய் தண்ணீர் கலந்து கடைகளில் விற்கும் சரக்கைப்போல் இல்லாமல் இது ஒரு சுயமான வாசனை கலவை. கடைகளில் விற்கும் ஓதிகோலோன் 10 துளி உபயோகிக்குமிடத்தில், எம்மால் செய்து விற்றுவரும் டீ ஓதிகோலோனை 2 துளிகள் உபயோகித்தால் போதுமானது. ½ அவுன்சு சீசாக்களில் விற்கப்படுகிறது. விலை சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

உரைந்த வாசனை பில்லைகள். — உரைந்த குலாப், உரைந்த மோதியா, உரைந்த லவண்டர்களாகிய 3 தினுசுகள் உடுப்புகளுக்குப் போடக்கூடிய உசிதமான வாசனை. தினுசுக்கு டப்பா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,
AYURVEDIC PHARMACY,
*Sri Venkatesa Perumal Koil Sannathy,*
TANJORE.

---

N. B.— என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

# புட்பபந்தம்.

இந்நூல் மாதம், திதி, நட்சத்திரம், கிரகம் இவைகளின் கூட்டுறவாலுந் தச தாதுக்களின் சேர்க்கையாலும் மழை பொழி காலத்தை நன்கு விளக்குவது.

இவ்விராசியில் இக்கிரகம் கூடின் இன்ன மழை வளம், இக்காலம் இவ்வளவிற்று, இவ்விடம் இவ்வளவிற்று என வரையறுத்துக் கூறும் நூல். மழை வளம் கண்டு வேண்டும் நன்மை பெறவும், வேண்டாதன ஒதுக்கவுங் கூடுமாதலான் இஃது ஒவ்வோர் வேளாண்மை மாந்தர்கட்கும் மிக அவசியமானது.

மழையின் உண்மை இன்மை கண்டு, இன்னதனை இங்ஙன் செய்து முடிக்குமாறு உணர்த்தவல்ல சோதிட பண்டித மணிகட்கும் இன்றியமையாதது.

பண்டைக்காலத்துச் சோதிட சார்வபௌம முனிநாதர்களால் ஆக்கப்பெற்ற வடமொழியினின்று மொழிபெயர்க்கப் பெற்றது.

இவ்வரிய நூல் ஸ்ரீ உமா மகேசுவரரால் ஸ்ரீ உமா மகேசுவரியார்க்கு அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள் மிகப் பாராட்டி எழுதிய முன்னுரையுடன் கூடியது.

இந்நூலைப்பற்றிய சில அபிப்பிராயங்கள் வருமாறு: —

புதுவைக் கலைமகள்: — "இப்புத்தகம் யாவர்க்கும் பயன் றரக்கூடியதாதலின் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தகுந்தது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நன்கு மதிக்கப்பெற்றது."

வித்தியாபாநு:—"சுத்தப் பதிப்பாகவுளது; நமது பண்டை மக்களின் மதி வலியை நன்கு வெளியிட்டு நம்மையுங் கௌரவப் படுத்தும் நூல்களுள் இதுவு மொன்றேயாம்."

302



சுதேசமித்திரன் :—"இன்னின்ன இராசிகளில் இன்னின்ன கிரகங்கள் சஞ்சரித்தலினுல் மழையுண்டாகும் உண்டாகாது என்பது விவரமாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிறது."

லோகோபகாரி : — "இப் புத்தகத்தில் மழை பெய்வ தறியுங் குறி, பயிர் விளைவறியுங் குறி, மழை பெய்யாதென் றறியுங் குறி முதலிய விஷயங்கள் காணப்படுகின்றன. இது வியவசாயிகளிடத்தும் சோதிட வாராய்ச்சி யுடையாரிடத்தும் அத்தியாவசியகமாக விருத்தற்குரியதாம்."

செந்தமிழ் : — "தமிழில் வசன நடையாக மொழிபெயர்க்கப்பெற்றுச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இதில் மழைக் குறிகள் மிக விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன."

பூர்ண சந்திரோதயம் : — "இது திதியின் கால வளவு, காற்றுக் குறி, மின்னற் குறி, மழை வளத்தின் அளவு, காலமிவற்றைக் காட்டும் சோதிட சாஸ்திரத்தைச் சேர்ந்த ஓர் அரிய நூல். வியவசாயத் தொழில் புரிவோர்க்கும் மற்றோர்க்கும் பிரயோசனப்படும்படி பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது"

புதுவைப் பிராஞ்சுநேசன் :— "மழைவருங் காலத்தை எல்லோரும் பகுத்தறிய வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சோதிடச் சார்பானது. ஒவ்வொருவர் கையினு மிருக்கத்தக்க சிறு நூல்."

இவையின்றித் தக்க பெரியோர்கள் பலர் எழுதிவிடுத்த நல்லபிப்பிராயங்கள் ஆங்கிலத்திலுந் தமிழிலும் பலவுள.

இதன் விலை வி. பி. செல வுட்பட அணு ஆறு.

இது வேண்டுபவர் பறங்கிப்பேட்டை சு. ஏ. குமாரஸ்வாமி யாச்சாரியிடத்திலும், ஷியூர் ப. அ. கிருஷ்ண ஸ்வாமிப் பிள்ளையிடத்திலும் பெற்றுக்கொள்க.

303
285



# தேள்!  தேள்!!

## தேள் கொட்டினால் வாதைப்படவேண்டியது இனிக் கிடையாது!

## ஏன்?

## அமெரிக்கன் தேள் மருந்து

என்னும் சஞ்சீவிக்கொப்பானதும், தேள்விஷத்திற்கு நமன்போன்றதுமான இந்தத் திவ்விய மருந்து நமக்குக்கிடைத்திருப்பதுதான் காரணம். இம்மஹா வல்லமை பொருந்திய மருந்தானது இந்தியாவிலும் மற்ற அயல் நாடுகளிலும் ஒவ்வொரு வாரத்திலும் ஆயிரக்கணக்கான ஜனங்களால் வாங்கி உபயோகிக்கப்படுகிறது. தேள் கொட்டினால் அழுதுகொண்டு வந்தவன் சிரித்துக்கொண்டு போவான் என்பதற்குத்தடையில்லை. வைத்தியர்கள் இம்மருந்தை உபயோகிக்கும்படி சிபார்சு செய்திருக்கிறார்கள் என்றால், இதன் பெருமையும் அருமையும் நீங்களே அறிந்துகொள்ளலாம். இந்தியாவில்தேள் கொட்டினால் ஒவ்வொரு குடும்பத்திலும் வருத்தமடையாதவர்கள் கிடையாது. இந்த மேன்மைபொருந்திய ஔஷதமானது ஒவ்வொரு குடும்பத்திலும் கையிருப்பிலிருக்கவேண்டிய முக்கியமான வஸ்து என்பதில் சந்தேகமும் உண்டோ? இதனுடைய அபூர்வ சக்தியென்னவென்றால், இதை யுபயோகித்த 2, 3 நிமிஷத்திற்குள் கடிவாயில்கூடக் கடுப்பில்லாது ஜில்லென்று குளிர்ந்துவிடும். ஒரு டப்பி மருந்திருந்தால் சுமார் 250 மனுஷர்களுக்குச் சௌக்கியத்தைக்கொடுத்து, பரோபகாரமென்னும் தர்மத்தையும் அடையலாம்.

டப்பா 1-க்கு அணா 10. தபால் கூலி வேறு.

உங்கள் விலாசத்தைத் தெளிவாக எழுதுங்கள்.

எங்கள் விலாசம்:

**கே. எஸ். சிங்காரம் அண்டு கோ,**

முத்துப்பட்டணம், காரைக்குடி.

# சந்தனாதித்தைலம்.

இஃது

அறிவிற் காதாரமான மூளையின் முக்கிய உணவு.

பரவைசூழ் பாரிற் றிறமை வாய்ந்த

அன்பர்காள்!

சுந்தரானந்தத்தை உண்டாக்கும் இத் தைலத்தைக் காலை நேரத்தில் உபயோகித்தவரின் மந்தபுத்தியையும் மனச்சலிப்பையும் போக்கி, சுறுசுறுப்பையும் மனோதிடத்தையும் உண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை. அனுபவத்தால் நன்கறிந்து இன்னலின்றி நன்னலமளிக்கும் தண்ணலான அண்ணலுற்ற மன்னர் புகழ் கண்ணியம் வாய்ந்த இதனை நித்தமும் எத்தனையோ சித்தத்தில் நத்தி வரப்பெற்று ஆனந்த ஸாகரமாகிய இதிற் கொஞ்சம் மூழ்கிவர நினைக்காம லிருக்கமாட்டீர்க ளென்பது திண்ணமான எண்ணம்.

அலைகடல்சூழ் அவனிதனில் அவதரித்த அறிஞர்காள்!

இது நிற்க, திறமான அறகஜா, சரிமண பரிமள கலவைச் சந்தனம், அந்தரத்தோர் மகிழ் சந்தனப்பவுடர், பூஸனைக்குரிய தஸாங்கம், பக்குவமான சிக்ஸாப்பொடி, நேசர் மெச்சும் கேஸர் பவுடர், உன்னத நன்மண ஊதுவத்திகள், பல்லைத் திறக்கச்செய்யும் வில்லை தினுசுகள், அஸ்தி வலுவேற்றுங் கஸ்தூரி, பவ்வியப் படுத்தும் ஜவ்வாது, உம்பர் மெச்சும் அம்பர், மனதுக் குகந்த புனுகு, சித்தர் நாடும் அத்தர், எங்கும் புகழ் குங்குமப்பூ, இச்சைதரும் பச்சைக் கற்பூரம், பாரோர் நாடும் கோரோசனை, இராஜாக்கள் மெச்சும் ரோஜாப்பூ குல்கந்து, நாக்கைத்தூக்கும் பாக்குத்தூள், தப்பிதங்கூறாக் கொப்பரைச்சீவல், சோம்பலையகற்றும் தாம்பூலக்குளிகை, தோஷமிலாத வாஸனைச்சுண்ணாம்பு, கற்பித அற்புத பற்பொடி, இன்னும் பற்பல (மான்மார்க்குள்ள) சாமான்

களும், இங்லீஷ், பாரீஸ், ஜெர்மனி ஸெண்டு தினுசுகளும், ஹேர் ஆயில்களும் எங்களிடம் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 18 பலம் நிறைகொண்ட சந்தனதித்தைலம் | டின் 1இ | ரூ. | 2 – 0 – 0 |
| ,, ,, | டின் 3இ | ,, | 5 – 8 – 0 |
| ,, ,, | டின் 6இ | ,, | 10 – 8 – 0 |
| ,, ,, | டின் 12இ | ,, | 20 – 0 – 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி பி. போஸ்டு மூலியமாக அனுப்பப்படும். காட்லாக் இனும்.

K. தாவுத் சாஹேப் அண்டு பிரதர்ஸ்
ஸெண்டு அண்டு அத்தர் வியாபாரிகள்
நெ. 311, பெரியகடைத் தெரு,
கும்பகோணம்.

---

கைவிடாதீர்கள்! ஏமாறுதீர்கள்!!





# சர்வ தேள்விஷ

## சஞ்சீவி.

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்.

குணமில்லாவிடில் ரூபாய் 100 இனும்.

நண்பர்களே, ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனே

வரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, யாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிஷ் வைத்திய பண்டிதர்களாலும் கண்டு மதிக்கப்பட்ட எமதுமேல்கண்ட லங்கர்மார்க்குள்ளசர்வ தேள்விஷ சஞ்சீவியைத் தேள் கொட்டினவிடத்தில் உபயோகிக்க உடனே இரண்டொரு நிமிஷத்துக்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுதுறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும் டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். குணமில்லாவிட்டால் பணம் வாபிசு. இந்த லங்கர் மார்க்குள்ள சர்வ தேள்விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இச் சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது கடமை. ஏனென்றால், இரவு 12 மணிக்கு நித்திரையில் விஷம் தீண்டிவிட்டால் அவன் எவ்வளவோ அவஸ்தைப்பட்டு அநேக மருந்துகளும், மந்திரங்களும், மாயங்களும் உபயோகித்துங்கூட பயன்படாமல்போகிறதல்லவா? அதற்காக இச் சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டியது அவசியம்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை:

| | | |
|---|---|---|
| பாக்கெட் 1இ | ரூ. | 0 — 8 — 0 |
| டஜன் பாக்கெட் | ரூ. | 5 — 0 — 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

# வி. ஏ. எஸ். பாணி,

3, இருளப்பன்தெரு,

மதராஸ்.